# தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை

# பதவி வெற்றிடங்கள்

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த பதவி 2015ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை சட்டத்தின் 15ஆம் இலக்க அத்தியாயம் மற்றும் அவற்றின் உப அத்தியாயத்தின் பிரகாரம் 03 வருட சேவைக் காலத்தின் கீழ், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியங்களுக்கான உரிமைத்துவம் சகிதமான பதவியாகும்.

## பணிப்பாளர் நாயகம் (பிரதான நிறைவேற்று அதிகாரி) (வெற்றிட எண்ணிக்கை 01)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மருத்துவம் (Medicine)/ மருந்தியல் மருத்துவம் (Pharmacology)/ மருந்தியல் (Pharmacy) அல்லது அதற்கு இயைபான வேறு பாடம் தொடர்பில் பட்டப் பின்படிப்பு சகிதம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட முகாமைத்துவ அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மருத்துவம் (Medicine)/ மருந்தியல் மருத்துவம் (Pharmacology)/ மருந்தியல் (Pharmacy) அல்லது அதற்கு இயைபான வேறு பாடம் தொடர்பில் பட்டப் பின்படிப்பு தகைமையைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**அத்துடன்**

பல்வேறு வேலைகளில் ஈடுபட்டுள்ள குழுக்களுக்கு தலைமைத்துவம் வழங்குவதோடு மனித மற்றும் ஏனைய வளங்களை முகாமைத்துவம் செய்வதில் நிலையான தேர்ச்சி.

**வயது:** (i) 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

(ii) அரச சேவையில் உள்ள சிரேஷ்ட நிறைவேற்று மட்ட அதிகாரியொருவர் வெளிவாரி விண்ணப்பதாரியாக விண்ணப்பிக்கும் வேளையில் அவர் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன் குறைந்தபட்சம் 03 வருடகாலம் இரண்டாம் நிலை அடிப்படையில் எதிர்வரும் காலத்தில் சேவையாற்றுவதற்கு இயலுமான வகையில் உச்ச வயதெல்லையை தீர்மானிக்கலாம்.

**பதவிக்குரித்தான சம்பள நிலை:** 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் HM 2-1 ரூபா (161,140 - 12x4,850 - 219,340) சம்பள அளவில் 2025-01-01ஆம் திகதிக்கு உரிய சம்பள நிலை 119,494/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

**ஆட்சேர்க்கப்படும் முறை:** நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் பணிப்பாளர் சபையினால் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அதிகார சபையினால் அமைச்சரிடம் விசாரித்து நியமனம் வழங்கப்படும்.

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் வகையில் புள்ளிகள் வழங்கப்படும்.**

| | | |
|---|---|---|
| இயைபுடைய மேலதிக அனுபவம் | - | 30 புள்ளிகள் |
| இயைபுடைய மேலதிக கல்வி/தொழில்சார் தகைமை | - | 30 புள்ளிகள் |
| ஏனைய வேலை செயலாற்றுகை மற்றும் திறமை | - | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையின் போதான செயலாற்றுகை | - | 25 புள்ளிகள் |
| மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை | - | 100 புள்ளிகள் |

**ஏனைய விடயங்கள்:**

**சகல விண்ணப்பதாரர்களும்:**

i. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் வேலைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

- அரச, அரை அரச நிறுவனங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

பிழையின்றி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதி செய்யக்கூடிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2025-11-08ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, அரச பொறியியல் கூட்டுத்தாபனக் கட்டிடம், 02ஆம் மாடி, இல. 130, டபிள்யு. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தபாலில் அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை.**